ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2264/53 - 2022 ජනවාරි මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.27
2264/53 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

1992, யூலை மாதம் 31 ஆந் திகதிய 725/28 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 1992 ஆம் ஆண்டின் 105 ஆம் இலக்க கட்டளை மற்றும் அந்த கட்டளையினை திருத்தம் செய்து 1992, திசெம்பர் 30 ஆந் திகதிய 747/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரிசுரிக்கப்பட்ட 1992 ஆம் ஆண்டின் 105 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம்(அ) வின் கீழான கட்டளையில் பிழை திருத்தப் பத்திரத்தில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசாங்கத்தின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) ஆம் பந்தியின் கீழ் இக் காணித்துண்டுகளின் உடைமையும் பொறுப் பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணை 1 இல் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை மாத்திரம் இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

எனது இல. : 3J/91/LRB/270.
காணி எடு. உத். இல. : BER/4/5/3/8.
காணி அமைச்சு, "மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, சனவரி 15.

**அட்டவணை**

*மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பேருவளை பிரதேச வருமான உத்தியோகத்தர் பிரிவில், பேருவளை கிராமத்தில் அமைந்துள்ள அதிகாரம் பெற்ற நில அளவையாளர் பி. எச். ஏ. டீ சில்வா அவர்களால் 1991.10.14 ஆந் திகதி தயாரிக்கப் பட்ட முதற்சுவட்டு வரைபட இல. 91/11/10 இல் குறிப்பிடப் பட்டுள்ள காணித்துண்டின் எல்லைகள்:*

***1. துண்டு இல. 1 - மாகல்ல வெல - விஸ்தீரணம் : 0.0186 ஹெக்டயார்***

*வடக்கு : துண்டு இல. 10 ; கிழக்கு : என். வி. ஜயசேன மற்றும் சிலர் உரிமை கோரும் காணி; தெற்கு: கிரிந்திய வீதி; மேற்கு: துண்டு இல. 8.*

EOG *01-0293*